[1992 மார்ச் 22

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 50 ரூபாய்தான் கொடுக்கிற திட்டம். ஐம்பது ரூபாய் கொடுத்தால் அறுபதாயிரம் ரூபாய் வருகிறபோது இதனைக் கட்டாயப்படுத்துவது என்பது, அதுவும் படித்த, கண்ணியம் மிக்க வழக்கறிஞர்களை கட்டாயப்படுத்துவது என்பது உகந்ததல்ல என்பதை நானும் வழக்கறிஞர் என்ற காரணத்தாலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் பணியாற்றுகின்ற காலத்தில் திடீரென்று இறந்துவிட்டால் இந்த நிதி அளிக்கப்படும் என்று கூறினார்கள். செயற்கையாக மரணம் அடைந்தால் இந்த உதவி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இயற்கையாகத் தானே ; இறப்பதிலே என்ன இயற்கையாக, செயற்கையாக? (சிரிப்பு).

திரு. கு. சீனிவாசன் ; அக்சிடெண்ட்டில் திடீரென்று இறப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திடீரென்றுதான். இறப்பு இறப்புத்தான்.

வினா எண் 398—திரு. கே. பி. மணிவாசகம். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

398—

உடுமலைப்பேட்டை சிறைச்சாலையை விரிவு படுத்துதல்.

* 4772—திரு. கே. பி. மணிவாசகம் ;

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) உடுமலைப்பேட்டை கிளை சிறைச்சாலையை விரிவு படுத்தும் கருத்துரு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

1992 மார்ச் 31]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. பி. மணிவாசகம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் கூறினார்கள். இருந்த போதிலும், தென்னகத்தினுடைய மான்செஸ்டர் கோவை என்றால், தமிழகத்தினுடைய மான்செஸ்டர் உடுமலைப் பேட்டை என்றே சொல்லலாம். அந்த அளவிற்கு தொழில் வளர்ச்சி மிகுந்த தொகுதி. அங்கே எல்லா கோர்ட்டு களும், சப்-கோர்ட் உட்பட அனைத்து நீதிமன்றங்களும் உள்ளன. ஆனால் சப்-ஜெயிலில் அதிக இட வசதி இல்லாத காரணத்தால், குறிப்பாக பெண் குற்றவாளிகளை தொலைவில் உள்ள கோவைக்குத்தான் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. இதனால் அதிக செலவும், அதிக காலமும், நீதி கிடைக்க காலதாமதமும் ஏற்படுகிறது. இதைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய புனித அரசு உடுமலைப் பேட்டை சிறைச்சாலையை விரிவுபடுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் உடுமலைப் பேட்டையைச் சேர்ந்தவன்தான். எனவே அந்த உடுமலைப் பேட்டை கிளைச் சிறையைப் பற்றி எனக்கு மிக நன்கு தெரியும். நான் படித்த பள்ளி அதன் அருகிலேயே இருக்கிறது. ஆனாலுங்கூட மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல அந்தச் சிறைச்சாலையிலே 26 பேர்களை சிறை வைக்கக் கூடிய இட வசதி இருக்கிறது. அதிக மானால் பக்கத்திலே இருக்கிற கோவைக்கு அழைத்துச் செல்லுகிறார்கள். என்றாலுங்கூட அங்கே இருக்கின்ற வசதியைப் பெருக்க வேண்டும் என்பதற்காக அண்மையில் நம்முடைய அரசு ரூ. 2,17,000 செலவு செய்திருக்கிறது. இரண்டாவது டாய்லெட் ஃபெசிலிட்டீஸ். அந்த சிறைச் சாலைக்கு சுற்றுச் சுவர் கட்ட 1 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. அதேபோல டாய்லெட் வசதிக்காக 25 ஆயிரம் ரூபாயும் ஆக 2 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் அண்மையிலே உடுமலைப் பேட்டை சப்ஜெயிலுக்கு செய்யப்பட்டு இருக்கிறது. இன்னும் தேவை என்றாலும்கூட, அவசியப்பட்டால் போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணையோடு செய்யப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.